752
752
177

பதிவு எண் — வெள்ளிக் கிழமையில் குருகுலக் கிளர்ச்சித் தாள்

முல்லைக்கொடி

தமிழ்க் கிழமை வெளியீடு :- இது, சான்றாண்மை இதழ்.

OFFICE OF THE REGISTRAR OF ...
2 MAR 1951
MADRAS

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-௩ | குருகுலம், மாம்பாக்கம் ; விகிருதி, மாசி ; 23—2—51. | தளிர்-௧௧

"குணநலம் சான்றோர் நலனே; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம்; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

சிந்தனை

குறித்த நாளையும் நேரத்தையும் எத்தனை தரம் புறக்கணித்தாய் என்பதை எண்ணிப் பார். உன்னை ஒரு பகுதியாகக் கொண்ட உலகத்தின் உண்மை இயல்பையும் அதன் தலைவனையும் நீ அறிந்து கொள்ளவேண்டிய காலம் இது.

ஒரு குறித்த கால எல்லைதான் உனக்கு அமைக்கப்பட்டிருக்கின்றது. மனத்தின் பல ஒழுங்கீனங்களை அடக்கி அதைப் பயன் கொள்ளாவிடில் அது கடந்துவிடும்; நீயும் அதனுடன் கடந்துவிடுவாய்.

புறத்தில் நிகழும் யாதாகிலும் ஒன்று ஏன் உன்னை அவ்வளவு நிலைகுலையச் செய்யவேண்டும்? முன்னும் பின்னும் குறிக்கோளற்று அலைவதைத் தவிர்த்து, ஏதேனும் நன்மையை அறிந்துகொள்ள ஓய்வு கொள்.

யாரும், பிறர் மன நிலைமையை எண்ணிப் பாராமைக்காக வருந்துதல் அரிதாயிருக்கின்றது. தம் மனச் சான்றும் அதன் தீர்ப்பாலும் நடத்தப்படாதவர் துன்பமுள்ளவராகவே இருக்க வேண்டும்.

—The Meditation of Marcus Aurelius.

—"பா. வ."

குருகுலத்தில்

திரு. சௌந்தரராஜ ஐயங்கார் அவர்கள் B. A.

நல்லுரை.

தலைவர் எனக்குப் பணித்தது போல் 'முதியோர் கல்வி'யைப்பற்றி எனக்குத் தெரிந்தவற்றை இங்குக் கூறுகின்றேன்.

'கல்வி' மனிதனுக்கு முதன்மையானது. நாலடியார் என்னும் நூலில்,

குஞ்சி யழகும் கொடுந்தானைக்
கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல—
நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு
நிலைமையால்
கல்வி யழகே யழகு.

என்று சொல்லியிருக்கிறது. அதாவது கூந்தல், ஆடை முதலிய வனப்புக்களைக் காட்டினும் கல்வி யழகே மக்களுக்கு முதன்மையாகத் தேவை.

'எக்குடி பிறப்பினும்
யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை
மேல்வருக என்பர்'

என்னும் முதுமொழிக்கிணங்க, கற்றவருக்கே எவ்விடத்திலும் சிறப்பு மிகுதி.

ஆங்கிலத்தில்,

"Pen is mightier than sword"

என்றும்

"Knoledge is power"

என்றும் சொல்லப்படுகிறது. அதாவது, போர் வாளைக் கொண்டு செயலாற்றுவதைவிடப் பேனாவின் முனையினால் உலகத்தையே விம்மிதம் அடையச் செய்ய முடியும். என்னதான் செல்வம் பெருகினாலும் கல்வி யறிவில்லாத நாடு கீழ்த்தரத்திலே இருந்துவருகிறது.

ஆப்பிரிக்காவில் கிம்பாலி என்னுமிடத்தில் வைரங்கள் பாறைகளாகவே வெட்டி யெடுக்கப்படுகிறது. எனினும் ஆப்பிரிக்கா இருண்ட கண்டமாகவே (Dark continent) உலகத்தவரால் கருதப்படுகிறது. நம் இந்தியாவிலும் கோலார் தங்கவயல்களில் தங்கம் வெட்டி யெடுக்கப்படுகிறது. எனினும் நம் தரம் உயர்ந்தபாடில்லை.

ஆனால் இரும்பும் நிலக்கரியும் மட்டும் கிடைக்கும் இங்கிலாந்து, கனிப்பொருள்களே மிகுதியாகக் கிடைக்காத அமெரிக்கா, நில நடுக்கத்தால் 'நித்தியகண்ட'மாக விளங்கும் ஜப்பான் ஆகிய இவைகள் உலகத்தில் மிக உயர்ந்த நிலையில் சுடர்விட்டு விளங்குகின்றன.

இந் நிலைகட்குக் காரணம் கல்விதான். இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் இவைகளில் கல்விக்கே முதலிடம் தருகிறார்கள். நம் நாட்டில் அவ்வாறில்லை. எனவேதான் நாம் கீழ்நிலையில் இருந்து வருகிறோம்.

இப்போதுள்ள நிலையில் முதியோர் கல்வியும் மிக்க விழிப்புடன் கவனிக்கவேண்டி யிருக்கிறது. பல நலன்களும் ஒருவனுக்கு இருந்தாலும், கல்வியில்லா விட்டால் உறவினரிடத்திலும் நாட்டிலும் அவனுக்கு உள்ள இழிவு நீங்க வழியில்லை.

"கவையாகிக் கொம்பாகிக்
காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—
சவைநடுவே
நீட்டோலை வாசியா
நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்"

என்பது போல், கல்வி யறிவில்லாத மூத்தவர்களை மரமென்றுதான் கருத வேண்டியிருக்கிறது.

குடியரசு நாட்டில் ஆட்சியாளர் முதியோர் கல்வி(Adult Education) திட்டத்தைப் பரப்ப முயன்று வருகிறார்கள். கல்விக் கண்காணிப்பாளர் பிப்ரவரி மாதம் 17-ந் தேதி முதல் முதியோர் கல்வி வாரம் கொண்டாடப்படும் என்று சொல்கிறார். அதில் நாம் அனைவரும் கலந்து கொள்ளவேண்டும்.

'இளமையிற் கல்' என்று முதுமொழி அறிவுறுத்துகிறது. எனினும் முதியோரைக் கல்விக்காக மறுபடி இளையோராக்க முடியாது. எனவே இப்போதுள்ள நிலையிலேயே அவர்கள் கல்வி பயிலுமாறு முயற்சி செய்ய வேண்டும்.

முதியவர்களில், இதுவரை கல்வி பயிலாதவர்கள் செய்தித் தாள்களைப் படிக்கவும், கடிதம் எழுதவும், குடும்பக் கணக்கு முதலியவற்றை எழுதவும் தகுந்த நிலையிலாவது கல்வி பயில வேண்டும்.

நம்மில் படித்தவர்கள் படியாத ஒருவனுக்குக் கல்வி பயிற்றுவதென்று கருதிச் செயலாற்றினால் போதும். ஆங்கிலத்தில் இதைக் குறித்தே,

"Each one teach one" என்னும் பழமொழி வழங்கி வருகிறது. ஆகவே இதனைக் கவனித்து முதியோர் கல்வியைப் பரப்ப முயற்சி செய்யுமாறு இப் பள்ளிப் பொறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி ஆடைகள்

வணிகக் குறி !

—N. K. M.—

தங்க நாடா

(பதிவு)

எண் 20 முதல் 100 வரையில்
வேட்டி, சேலை, துண்டு, போர்வை,
மேலாடை முதலியவை பல வகை-
களிற் கிடைக்கும்.

நூலாடைகட்கும்
பட்டாடைகட்கும்

நம்பிக்கையான இடம் :

கருப்பண முதலியார்
ஸ்டோர்ஸ்,

துணி வாணிபம்,

63, சிடங்குத் தெரு, சென்னை 1.

பெரிய புராணம்

ஆரூருடைய நம்பிகளின் வரலாறு, நூலின் முன்னும் பின்னும் அமைந்த இரண்டு சருக்கங்களில் மட்டுமன்றி, இடையிலும் அப் பெருமானோடு தொடர்புகொண்ட அடியார் வரலாறுகள் கூறும் இடங்களில் தொடர்ந்து வருகின்றது. இங்ஙனம் தொடக்கத்திலும் இறுதியிலும் இடையிலுங்கூட அங்கங்கும் ஆரூருடைய நம்பிகள் வரலாறுகள் நிறைந்து வருதலும், அவராற் பாடப்பெற்ற திருத்தொண்டர் வரலாறுகள் இடையிடையே வந்து பொருந்துதலுமாகப் பெரிய புராணம் நெறி கொண்டு செல்கின்றது.

ஆகவே, இந்நூலின் பொது அமைப்பை நோக்கினால், இது, சுந்தரமூர்த்தி நாயனார் ஒருவர் புராணமாகவே தோற்றும். அவர் புராணத்தைச் சொல்லிச் செல்லும் நெறியில், அவரால் பரவப்பெற்ற எழுபத்திரண்டு அடியார் வரலாறுகளையும் கிளைச் செய்திகள்போல் இணைத்துச் செல்லும் நிலையும் தோற்றும். இவ்வாறு காணுங்கால், பெரிய புராணத்துக்குத் தலைவராவார் சுந்தரமூர்த்தியடிகளே என்பது தெளியப்படும்.

இதனால், திருமலைச் சருக்கத்தில், நம்பியாரூரர் முதலில் திருமலையில இருந்த வரலாறும், பின்பு சோழநாட்டில் விளங்கினமையால் அந் நாட்டுச் சிறப்பும், திருவாரூரில் இருந்தமையால் அந் நகரச் சிறப்பும் அந் நகரத்தில் நாளுந் திகழ்ந்திருந்த திருக்கூட்டச் சிறப்பும், அடுத்து, இறைவனால் தடுத்தாட்கொள்ளப் பெற்றுத் திருத்தொண்டத் தொகை அருளிச் செய்தமையால் தடுத்தாட்கொண்ட புராணமும் முறையே வருகின்றன. கடைசியில் வெள்ளை யானையில் ஊர்ந்து, நம்பியாரூரர், திருமலைக்குச் சென்றமையால், வெள்ளானைச் சருக்கம் இறுதியில் அமைந்தது.

எனவே, முதல் நூல் ஆசிரியராகிய நம்பியாரூரர் வரலாறு தொடங்கும் திருமலைச் சருக்கத்தில், 'திருமலைச் சிறப்பு' என்பது, முதலில் அறிந்து இன்புறுதற்குரியது. அதனை மெய்யன்புடன் இனிக் கண்டு மகிழ்வோம்; தொடங்கித் தொடர்ந்து நலமுறுவோம்.

9

தமிழகத்துக்கு வடக்கு எல்லை, மலை; ஒரு காலத்தில் பனிமலை என்னும் 'இமய மலை' வட எல்லையாயிருந்தது. அதற்கு முன்னும் பின்னும் திருவேங்கடமலை எல்லையாய் விளங்கிற்று விளங்குகின்றது. இந்த இரண்டு மலைகளும் 'திருமலை' என்னும் பெயர் பெற்றவை; தெய்வத் தன்மை அமைந்த மலைகள் திருமலை எனப்படும்.

பனிமலை, உலகத்திலேயே பெரிய மலை; உயரமான மலை; கண்டாரையே யன்றிக் காணாரையுங் கவருந் திருக்கயிலாயம் அமைந்த மலை. நுட்பமும் தூய்மையும் மிக்க மலை. யார்க்கும் அறிவதற்கரிய கடந்த முழுமுதன்மையுடைய கடவுள் தன்மை அமைவதற்கு ஏற்ற எட்டாப் பெருமலை. இதனால் தெய்வமலை என்னும் பொருளில் வருந் திருமலை என்னும் பெயர் இதற்கு மிகவும் பொருந்தும். திருக்கயிலாயப் பகுதியினாலேயே இமயமலை நாளுந் தெய்வப் பெருமை சிறந்து வருகின்றது. எனவே, 'இமயமலை' எனினும் 'திருக்கயிலாய மலை' எனினும் 'திருமலை' எனினும் ஒன்றேயாம்.

திருமலைச் சிறப்பு இங்கே பன்னிரண்டு செய்யுட்களால் இனிது புகழப் பெறுகின்றது.

பனிமலையின் பகுதியில் வெண்ணீறு புனைந்ததுபோல வெண்ணிறத் தோற்றத்துடன் திருக்கயிலைத் திருமலை விளங்குகின்றது. அது, யார்க்கும் அறிவரிய சிவபெருமான் நிலை பெற்றிருப்பது. உலகு முழுதும் செய்த மாபெரும் புண்ணியங்கள் ஒருங்கு திரண்டு தோன்றுவது போலக் காட்சியளிப்பது. உலகத்திலுள்ள ஏனைத் திருப்பதிகளெல்லாம் உலகமென்னும் மணிக்கொடியில் தளிர்களைப்போல் விளங்க, திருக்கயிலை மலை அதன் உச்சியில் அழகிய வெண்மலர் போல் உயர்ந்து திகழ்கின்றது.

மறையொலியும் இசையொலியும் ஈகை முழக்கமும் வான துந்துபியும் திருமலை மருங்கெலாம் ஆர்த்தபடியிருக்கும். தேவர் வணங்குதலால் அவர் முடிமாலையும் தேவர் நாட்டுக் கற்பக மாலையும் முனிவர் கைகூப்பி அஞ்சலி செய்தலால் அவர் கைம்மலர் மாலையும் மலையின் முன்னிடமெல்லாம் இனம் இனமாய் விளங்குகின்றன. இத்தகைய ஆர்ப்புகளோடுங் காட்சிகளோடும் குறட் சிறு பூதத் திரள் கோடிகோடி, பாங்கெலாம் தம் இயல்பின்படி பாடி ஆடுகின்றன!

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை. 1

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

கிளை	விகிருதி, தை	தளிர்
3	23-2-51 வெள்ளி	19

- எழுத்தறிவு -

எங்கும், இக் கிழமை, 'எழுத்தறிவு இயக்கம்' கொள்ள அரசினர் முயல்கின்றனர். மக்களும் இயன்ற ஒத்துழைப்புக்கு அங்கங்கும் தொடங்குகின்றனர். இம் முயற்சியும் ஒத்துழைப்பும் இன்னும் எவ்வளவோ பெருக வேண்டியுள்ளன.

ஊக்கந்தான் இதற்கு மிகுதியாக வேண்டும்; அதுதான் இதற்கு அடிப்படைச் சொத்து.

கற்றவர் ஒவ்வொருவரும், நாட்டில் ஒவ்வொருவருக்காவது எழுத்தறிவு உண்டாக்குதல் எளிதுதான். உயர்நிலைப் பள்ளி மாணவரும், கல்லூரி மாணவரும் தம் விடுமுறைக் காலங்களில், நேர்ந்த இடங்களில், இச் சிறந்த பணியைப் பொறுப்புணர்ச்சியுடன் செய்வது நாட்டுக்கு எவ்வளவோ நலம்பெருக்கும். உறவிலும் அயலிலும் எவ்வளவோ பேர் எழுந்தறிந்தவராவர்.

முன்னோர் இவ் ஊக்கம் உடையவர் என்பது, "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்று அவர்கள் ஊக்கவுரை கூறிக் கிளர்ச்சி செய்திருப்பதிலிருந்து தெரிகின்றது. அயலவர் குழப்பங்களாலும் மேல் வீழ்வாலும் இடையே எல்லாம் நிலைகுலைந்தன.

நாட்டில் உடன் வாழும் அன்பர்கள் ஏழை எளியவர்கள் எழுத்தறிவு பெற்றிருப்பது ஒவ்வொருவரும் பெருமைப்படவேண்டிய செய்தியாகும். குடும்பத்தில் ஒருவர் படிப்பற்றவராயிருந்தால் வெட்கமுறுவதுபோல, நம் நாட்டவர் எழுத்தறிவின்மைக்கும் வெட்கப்படும் உணர்வு நிலவரவேண்டும்.

எழுத்தறிவு, பின்பு மொழியறிவாய்க் கலையறிவாய் அருளறிவாய் ஓங்கி வர வழிவாயில்கள் உண்டாகும்.

ஒரு பத்தாண்டுக் காலம் பிறமொழி வளர்ச்சிக்குச் செலவு பெருக்குவதை அளவில் நிறுத்தி வைத்து, தாய்மொழியில் எழுத்தறியாதார்க்கு எழுத்தறிவித்தலும், புலமை ஆர்வம் உடையார்க்கு அதனைப் பெருக்குதலும் பற்றிச் செய்கைகளும் செலவுகளும் நிகழ்ந்துவந்தால், நாட்டின் வளம் உரிமை அமைதி இன்ப வாழ்க்கை முதலிய வளர்ச்சிகளுக்கு எவ்வளவோ உதவியாயிருக்கும்.

இயக்கத் தலைவர்களும், ஆட்சியாளரும், பொது நலத் தொண்டர்களும், இதழாசிரியர் நூலாசிரியர்களும், அயல் மொழிகளின் மேல்வீழ்வுக்கும் கவர்வுக்கும், அடிமையாகாமலும் இரையாகாமலும் உறுதியாய் உணர்வுடன் இருந்து, நாட்டில் மூடுபனிபோல் மூடியுள்ள தாய்மொழி அறிவின்மையைப் போக்க ஒற்றுமையாய் உடன் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். நம்மரில், நூற்றுக்கு எண்பது பேர் எழுத்தறியாதவர் என்பது எவ்வளவு வெட்கக் கேடு! நல்வாழ்க்கைக்குரிய நன் முயற்சிகளுக்கு எவ்வளவு இடர்!

கிராம சேவை :

குருகுலத்தை அடுத்த சுற்றுப்புற ஊர்களில், குருகுலம், கிழமைக்கு ஒரு முறை கிராமசேவை செய்துவருகின்றது.

"தன் கையே தனக்குதவி" என்னும் பெரும் பண்புணர்ச்சியை அங்கங்கும் மிகுவித்து, அந்தந்தக் கிராமத்தார் தம் தேவைகளைத் தாமே நிறைவேற்றிக் கொள்ளும் வழிவகைகளைக் குருகுலத்தார் உதவுவர்; தாமும் செய்து காண்பிப்பர்; செய்வர்.

12-2-'51 திங்கள் மாலையும், 20-2-51 செவ்வாய் மாலையும் முறையே 'சிறுபாடி' என்னும் ஊரிலும் 'நேத்தப்பாக்கம்' என்னும் ஊரிலும் குருகுலத்தின் கிராமசேவை, ஊரவர் ஆதரவுடன் இனிது நிகழ்ந்தது.

ஊக்கமுள்ள கல்வித் தலைவரும் பிறரும் குருகுலத்தாரது கிராம சேவையில் ஆர்வத்துடன் கலந்து கொள்கின்றனர். 20-2-51-ல் நடந்த நிகழ்ச்சியில், மதுராந்தகம் வட்டம் பள்ளி வருகை அலுவலரும் ஆதாரக் கல்விமுறை பயின்ற அரும் பணியாளரும், தக்க தொண்டருமாகிய திரு. தியோடர் அவர்கள் பேரார்வத்துடன் கலந்து சேவை புரிந்தமை குறிப்பிடத்தக்கது.

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

மதுராந்தகம் டெப்டி தாசில்தார் திரு. K. பெரிய நாயகம் M. A. அவர்கள் தலைவர்; குருகுலப் பள்ளி மாணவ மாணவியர், ஒரு கதை நடிப்பு நடத்தினர். குருகுல இல்லத்தின் மாணவி திரு. சந்திராபாய் அம்மை 'குருகுல முதியோர் கல்லூரி'யைத் தொடங்கிவைத்தார். மாவட்டக் கழக உயர்நிலைப் பெண்பள்ளித் தலைமையாசிரியை திரு. K. அகிலா அம்மையார் B. A., L. T. அவர்கள் ஆதரவு உரை கூறினர். பாடசாலைக் கண்காணிப்பாளரும் வருகை அலுவலரும் அன்புடன் விழாவிற் கலந்து கொண்டு வாழ்த்து வழங்கினர். தலைவர் தகுதியான அழகிய முடிவுரை கூறியபின், நன்றியுரை வாழ்த்திசைகளுடன் விழா நிறைவுற்றது. பள்ளியாசிரியர்களும் கிராம அலுவலரும் இவ் விழாவில் நல்லுணர்வுடன் பங்கெடுத்துக்கொண்டு உழைத்துச் சிறப்பித்தது பாராட்டுதற்குரியது.

முதியோர் கல்வி - - - - வார விழா

நிகழ்ச்சிகள்

குருகுலத்திலும் சுற்றுப் புறங்களிலும்

(17-2-51 முதல் 22-2-51 வரை)

முதல் நாள் :

தென்னிந்திய முதியோர் கல்வி இரண்டாவது ஆண்டு விழா மதுராந்தகத்தில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

காலையில், பள்ளிக்கூட மாணவ மாணவியர் மூதியோர் கல்விச்குரிய அறிவுரை அட்டைகள் தாங்கியபடியாய் ஊர்வலம் வந்தனர். இது, காண இனிதாயிருந்தது.

மாலை 7-மணிக்குக் சாந்தி மண்டபத்தில் பொதுக் கூட்டம் கூடியது. திரு R. கோபாலகிருஷ்ணன் எம்.ஏ., பி.எல். (சப்-மாஜிஸ்ரேட், மதுராந்தகம்.) அவர்கள் தலைமை தாங்கினர்.

கடவுள் வணக்கத்துக்குப் பின், மதுராந்தகம் இந்து தொடக்கப் பெண்பாடசாலைச் சிறுமியரும், போர்டிங் ஆண் பாடசாலைச் சிறுவரும் கதம்ப நிகழ்ச்சிகள் நிகழ்த்தினர்.

'முதியோர் கல்வி' என்னும் பொருள்மேல், திரு. C. கோவிந்தராஜ முதலியார் B. A., (தாசில்தார், மதுராந்தகம்.) அவர்களும், இந்திரபோக முதலியார் (தலைமை யாசிரியர், மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளி, கருங்குழி.) அவர்களும், S.R. தியோடர் (பள்ளி வருக அலுவலர்) அவர்களும், A. சவுந்தராராஜ அய்யங்கார் B. A. அவர்களும், விஜயராகவ ரெட்டியார் அவர்களும் பிறரும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

தலைவர் முடிவுரையாக, உரிமை இந்தியாவில் ஏன் முதியோர் கல்வி வாரம் கொண்டாட வேண்டும் என்றும், பொதுமக்கள் இவ் வகையில் ஆட்சியாளருடன் ஒத்துழைத்து எழுத்தறிவின்மையைப் போக்க வேண்டும் என்றும், கேட்டுக் கொண்டார்.

மதுராந்தகம் முதியோர் கல்விச் சங்கச் செயலாளரும், பள்ளிக் கண்காணிப்பாளருமாகிய திரு. M. வேதகிரி அய்யர் B. A., B. T. அவர்கள் நன்றிகூற, நாட்டியல் பாடலுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

மூன்றாம் நாள் :

இந் நாள் விழா, இந்து உயர்நிலைப் பள்ளியிற் கிளர்ச்சியாக நிகழ்ந்தது.

தலைவர், பள்ளித் தலைமையாசிரியர் உயர்திரு இராஜாராமய்யர் B.A.,L.T. அவர்கள்.

தொடக்கப் பாடசாலை மாணவியராலும், 'காரனேஷன் பள்ளி' மாணவியராலும் கும்மி, கோலாட்டம் நடைபெற்றன.

நம் குருகுலப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி, முதியோர் கல்வியை எளிதில் எப்படி போதிப்பது என்னுங் கருத்தெடுத்துத் தெளிவாக விளக்கினர். திரு. சவுந்தராராஜ அய்யங்கார் B. A. அவர்கள், முதியோர் கல்வியின் இன்றியமையாமை பற்றி இனிது விரித்துரைத்தார். கழகச் செயலாளர் திரு: M. வேதகிரி அய்யர் B.A.,B.T. அவர்கள் முதியோர் கல்வி நிலையத்தை எப்படி நடத்த வேண்டும் என்றும், அதற்கு என்னென்ன கருவிகள் உதவிகள் வேண்டும் என்றும் எடுத்துத் தக்க குறிப்புகள் கொடுத்தனர்.

திரு. S. R. தியோடர் அவர்கள் உணர்ச்சி மிக்க நன்றியுரையோடும், நாட்டியல் வாழ்த்தோடும் நிகழ்ச்சி நன்கு நிறைவேறியது.

ஐந்தாம் நாள் :

22.2.51 வியாழக் கிழமை குருகுலத்தில் விழா நிகழ்ந்தது.

காலையில் ஊர்வலமும், மாலையில் கூட்டமும், இரவு முதியோர் கல்லூரித் தொடக்கமும் ஏற்ற விரிவுரைகளுடன் நடிப்புகளுடன் பாட்டுகளுடன் நடைபெற்றன.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

குணங்களை நினைக்கவும், சொல்லவும், பரப்பவும், அவர்களோடு இணங்கி நற்றொண்டாற்றவும் அவற்றால் நாமும் நல்லவராயும் வல்லவராயும் வளர்ந்து புகழ் பெறவும் தக்க வாய்ப்புகள் வேண்டுமல்லவா?

உலகம் போகிற போக்கில் இன்று இத்தகைய வாய்ப்புக் கிடைப்பது சற்று அரிதாகவே இருக்கின்றது.

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரும், அருந்தமிழ்ப் புலவரும், சிவநெறிச் செஞ்சொற் கொண்டலுமாகிய ஆசிரியர் இளவழகனுர் கண்டுள்ள குருகுலத்தின் சார்பினல், சென்னையிலும் மாம்பாக்கத்திலும் இத்தகைய வாய்ப்பு எளிதாகக் கிடைக்கின்றது.

அவரவர் தத்தம் நிலைக்குத்தக அக் குருகுலத்தோடு தொடர்பு கொண்டு பயன் பெறலாம்; நல்லோர் பலரோடு இணங்கலாம்; அவரவர்களின் நற்குணங்களையும் நற்செயல்களையும் வியந்து போற்றி நாமும் நல்லோராகலாம்.

நன்மைகளை நினைந்து நன்மைகளிற் பழகி நல்லவராகவும் வல்லவராகவும் வளர்ந்து புகழ்பெற, உலகப் பொதுமறையாகிய திருக்குறளுக்கு ஒரே ஒரு செய்கை நிலையமாக முகிழ்த்துள்ளது குருகுலம்; அருளமைப்பாகிய இக் குருகுலத்தோடு தொடர்பு கொள்வதைவிட எளிய இனிய நல்லவழி நல்லிணக்கத்துக்கு நாம் காண்பது அரிது.

எனவே, "கொள்ளுவோம் குருகுலத் தொடர்பு! செல்லுவோம் நல்ல வழியில்!" என்று எல்லோரையும் கூவி அழைப்போம்; அழைத்துச் சேர்ப்போம்; சேர்த்து, அரும்பெருந் தொண்டுக்கு உறுதிகொள்வோமாக!

—'ஆடலரசு'

- - நல்ல வழி - -

நல் வழியில் செல்லத்தான் எல்லோரும் விழைகின்றோம்; ஊர்ப்பயணத்திலும் சரி, வாழ்க்கைப் பயணத்திலும் சரி. ஊர்ப்பயணங்களில் ஏற்படும் இன்னல்கள் இடையூறுகளைப் போல எத்தனையோ மடங்கு இன்னல்களும் இடையூறுகளும் வாழ்க்கைப் பயணத்தில் ஏற்படுகின்றன.

நன்மையும் உண்மையும் :

பொதுவாக எல்லோருமே, நம்மை நாலு பேர் 'நல்லவன் வல்லவன்' என்று கொண்டாடவேண்டும் என்று விரும்புகின்றனர். நல்லவன் என்று பெயரெடுக்க எண்ணிச் செய்கின்ற செயல்களின்போது இருக்கின்ற மனப்பான்மை, 'வல்லவன்' என்று பெயரெடுக்க எண்ணிச் செய்கிறபோது பெரும்பாலும் இருக்கிறதில்லை.

வாழ்க்கைப் பாதையில் செல்லுகிறபோது, பற்பல காலங்களில் நம் நினைவு முதலியன நன்மைகளிலேயே நிற்பதில்லை. தனித்திருக்கிறபோதும் பிறர் அறிய வாய்ப்பில்லாத போதும் தீமைகளிலும் சென்றுவிடுகின்றது.

'நல்லவன்' என்று பெயரெடுக்க, எப்போதும் மனம் நன்மைகளையே நாடி நிற்கவேண்டும். ஒரோஒருகால் தீமைகளில் மனம் படிந்தால் நம் நல்ல பெயருக்கு இழுக்கு நேர்கின்றது. மனம் நன்மையிலேயே நிற்கும்போது, சூழ் நிலைகளால், சுற்றியுள்ளார் நம்மை வேறாக எண்ண நேர்ந்தாலும், பின் உண்மை உணர்ந்து நம்மைப் பாராட்டுவர். ஆதலின் நல்லவராகும் பொருட்டு, பிறர் கருத்தை எதிர்பாராமல் முதலில் நாம் எப்போதும் நன்மைகளையே நினைத்துக்கொண்டிருக்கவேண்டும். பின் சொல்லும் செயலும் அதன் வழி நின்று, பயன் நன்மையாயிருக்கும்.

'வல்லவன்' என்று பெயரெடுக்க வேண்டுமானால், நாம் மேற்கொள்ளும் செயல்களையெல்லாம், செவ்விதின் முடிக்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். ஆற்றலோ அறிவால் விளைவது. அறிவு, 'சென்ற விடத்தால் செலவிடாது தீதொரீஇ நன்றின்பால் உய்ப்பது' என்று முடித்துக் கூறினர், ஆசிரியர் திருவள்ளுவர். ஆதலின், அறிவும் அதன்வழி வல்லமையுங்கூட நல்லவற்றைச் சூழ்வதனாலேயே உண்டாகும் என்று தெரிகின்றது.

இணக்கமும் சூழலும் :

இனி, இவ்வாறு 'நல்லவராகவும்', 'வல்லவராகவும்' நன்மைகளையே எண்ணி நன்மைகளையே பேசி நன்மைகளையே செய்து பழகவேண்டிய நாம், உலகில் பல்வேறு சூழல்களால் அவ்வாறு செய்ய முடியாதவர்களாகவும் இருக்கின்றோம. நம் வாழ்வில் நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும், செல்லும் போக்குக்கும் நம் சூழல்களும் காரணங்களாயிருக்கின்றன. ஆகவே சூழல் நன்றாயிருந்தால், திறமையாயிருந்தால், நம வாழ்வும் நல்வாழ்வாய் வெற்றிவாழ்வாய் அமையும்.

இணக்கத்திற் கேற்பச் சூழல் அமையும். நல்லிணக்கம் நற்சூழலை உண்டாக்கும். அதனாற்றான் 'நல்லாரிணக்கமும் நின் பூசை நேசமும்' என முதலில் நல்லாரிணக்கத்தை வேண்டினர் சான்றோர். எனவே நல்லாரைத் தேர்ந்து அவர்களோடு இணங்க வேண்டும்,

இணங்குவோர் கடமை :

நல்லோர் இணக்கம் இருந்துவிட்டால் மட்டும் போதுமா? அவர்களிடத்துள்ள நன்மைகள் நம்மிடத்து விரைந்து வந்து நிரம்பும் வழி என்ன? அதனால், நாமும் நல்லவர்களாய் வல்லவர்களாய் உயர்ந்து புகழ்பெறுவது எப்படி?

இணக்கமுற்ற நல்லார் குணங்களைப் பற்றியும் அறிவாற்றல்களைப் பற்றியும் நற்செயல்களைப் பற்றியும் எண்ணவேண்டும்; பலகாலும் எண்ண வேண்டும்; ஈடுபடவேண்டும்; எங்கும் பரப்பவேண்டும்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே,
நலமிக்க
நல்லார்சொல் கேட்பதவும் நன்றே—
நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே
அவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்று!"

இனி, அவர்களிடத்து, உயிர்களுக்குள்ள இயல்பின்படியோ அல்லது உண்மை நிலைகளை நாம் சரிவர உய்த்துணராததாலோ எவையேனும் ஐயப்படத்தக்கன காணப்பட்டால், அவற்றைப்பற்றிய உண்மைகளை வினவி அறிதலும், மேலும் தெளிவுபடாமல் நிற்பவை உளவேல் அவற்றைப் பொருட்படுத்தாது விலக்கி, அதனால் அவர்கள்பாற் காணப்படும் எவ்வளவோ பெரு நலங்களையும் இழந்து விடாமல் நன்மைகளில் இணங்கிக்கொள்ளவேண்டும். அதனால் நம் பண்பாடு உயரும்; நல்லியல்புகளும் நல்லாற்றல்களும் வளரும். புகழும் பிற நலங்களும் பெருகும்; 'நல்லவர்' எனவும் 'வல்லவர்' எனவும் புகழ்பெற இதனினும் சிறந்த வழி வேறில்லை. இதுபற்றி யன்றோ,

"பிறரால் பெருஞ்சுட்டு
வேண்டுவான் யாண்டும்
மறவாமை நோற்பது
ஒன்றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச்
சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்"

என்ற நீதிநெறி விளக்கப் பாடலும் எழுந்தது.

இதோ வாய்ப்பு :

இனி, நல்லோர் பலரைக் காணவும், அவர் சொற் கேட்கவும், அவர்தம்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE,

பகையா? உறவா?

[அ. தி. வீரராகவன்]

திடீரென்று இவர்கள் இருக்கும் அறைக்குள் இந் நேரத்தில் யார்? ஆம்! குந்தவிபோல் தோன்றுகிறது. விமலாதித்தன் அவளைக் கண்டவுடனே அச்சம் கொண்டான். பிறகு மெதுவாக தம் இடுப்பில் செருகியிருக்கும் உடைவாளைக் கையில் எடுத்துக்கொண்டு, தான் தப்பிவந்த மறை வெளியாகாதிருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, குந்தவியைக் கொல்லக் கையை ஓங்கினான். அவள் சாந்தினியருகில் சென்று அவளை அணைத்துக்கொண்டாள். விமலாதித்தனைச் சாந்தினி தடுத்து எங்கேயாவது ஒருவன் தன் வருங்காலத் துணைவியைக் கொல்லத் துணிவானா? ஈதென்ன செயல் என்று கேட்டாள்.

'இவள்...' என் துணைவியா?

ஆம்! நான் உனக்குத் தேர்ந்தெடுத்திருக்கும் அழகுப் படிமந் தான் இவள். அரசன் இராஜராஜன் மகள். குந்தவி என்பது இவளுடைய பெயர்.

அண்ணி! என் வாழ்க்கையில் பெரும் பங்கு கொண்டிருக்கும் நீங்கள் என் தெய்வமேதான். தவறாக நடந்துகொள்ள இருந்தேன். கண்மூடித்தனமாக ....அதனால்...... ஆனால்......

ஒன்றும் நிலைமை கெட்டுப் போகவில்லை. இவளும் உன்னை விரும்புகிறாள்.

மிக்க மகிழ்ச்சி. அண்ணி! நான் வந்து மிக்க நேரமாகிவிட்டது. பிறகு பார்க்கிறேன். உங்களிருவருக்கும் போய்வருகிறேன்.

இதற்குள் குந்தவி தன் கையில் இருக்கும் அரச இலச்சினை பொதித்த முத்திரை மோதிரத்தைக் கழற்றி 'அக்கா! இதை அவர் கையில் அணிந்து கொள்ளட்டும். இதை அணிந்துகொண்டால் அரண்மனைக் காவலாளிகளால் ஒருவகை இடையூறும் நேராது! என்று ஆதரவுடன் அன்பு மொழி பேசினாள்.

'அண்ணி! என்மேல் இவ்வளவு அன்பும் பரிவும் காட்டக்கூடிய ஒருவரையா கொல்ல நினைத்தேன்! நீங்கள் தடுத்திராவிட்டால் நான் மாபெரும் பாவம் செய்தவன் ஆகியிருப்பேனே! என்று கூறி அவள் கொடுத்த மோதிரத்தைக் கையில் அணிந்துகொண்டு, அன்பின் அறிகுறியாகத் தன் மோதிரத்தை அவளுக்கீந்து, தன் அண்ணிக்கு வணக்கம் செலுத்திவிட்டு, குந்தவியின்மேல் அன்புக்கு அடையாளமாக அவள் கையை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு அவ்விடம் விட்டு அகன்றான்.

அடுத்த நாள் அப் பெட்டியைச் சிறைக்கோட்டத் தலைவன் திறந்து பார்க்க அதில் யாரும் இல்லாதது கண்டு திகில்கொண்டான். அதை அப்படியே மூடிவிட்டு, உடனே, நான்குபேரை அழைத்து அப் பெட்டியை அப்படியே தூக்கிக்கொண்டு அதைத் திறக்காமலேயே இடுகாட்டில் இட்டுக் கொளுத்தி விட்டான்.

பாவம்! விமலாதித்தன், எவரும், தான் தப்பிவிட்டதைக் கவனிக்கவில்லை என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தான். ஒற்றர் தலைவன் 'வீரன்' நடு இரவில் ஓர் உருவம் அங்கு மூலையில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியைத் திறந்துகொண்டு செல்வதைப் பார்த்தான். இருட்டானதால் அவன் யார் என்று அறிந்துகொள்ள முடியவில்லை. அந்த அறையில் அவன் குந்தவியுடனும் சாந்தினியுடனும் பேசியதையும் வீரன் கவனித்தான். தப்பியது விமலாதித்தன் என்பதைத் தெரிந்துகொண்டான். குந்தவிக்கும், விமலாதித்தனுக்கும் இடையறா அன்பு தழைத்திருக்கிறது என்பதையும் அறிந்துகொண்டான். அவன் தப்பிப் போவதில் நன்மையே தவிர தீமையொன்றுமில்லை என்றும் கருதினான். ஆகையால் அவனைப் பின்தொடருவதை நிறுத்திக்கொண்டான்.

வெற்றியுடன் வாகைசூடித் தனது நாட்டின் [illegible] வீர முழக்கத்துடன் வந்துகொண்டிருந்தான் இராஜராஜன். இராஜராஜன் சிவபக்தியில் சிறந்தவன். அவனை எதிர்கொண்டார் ஒரு முனிபுங்கவர். நீண்ட சடை; நெற்றியிலே திருநீறு; உடம்பு முழுதும் வெண்ணீற்றொளி; கையில் கமண்டலம், கைத்தடி, உருத்திராக்கம் முதலியவைகள் வைத்திருந்தார். மன்னனுக்கு எதிர்சென்று, 'மன்னவ வாழி! பாண்டியனையும் சேரனையும் ஒருங்கே தோற்கடித்த தீர! சேர பாண்டியர்களின் செருக்கையொழித்த வீர! நீ வாழ்வாயாச! நின் கொற்றம் வாழுமாக! நின் நண்பர் சக்திவர்மர் நின்னை அண்டியிருக்கிறார். அவர் நின்னோடு, இத் தென்னாட்டுப் போரில் கலந்துகொண்டு வெற்றியும் கண்டார். அவருக்கு உதவிசெய்வது உன் கடமை. நீ தற்போது நகருக்குச் செல்லாமல், நேரே வேங்கை நாட்டின்மீது படையெடுப்பதுதான் முறை என்று கூறினார்.

(தொடரும்)

- உயர்ந்த -
வைரங்கள்
சவரன் போன் நகைகள்
அசல் வெள்ளி
சாமான்கள்
உத்தரவாதமுள்ளவை
S. சாமிநாத அய்யர் & சன்ஸ்
111, நேதாஜி போஸ் ரோடு,
சென்னை 1.
வெள்ளி விக்கிரகங்களும் கிடைக்கும்
—— GUARANTEED ——
JEWELLERY HOUSE

"முல்லைக் கொடி"

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில், புரியும் வகையில்,
உரிய விலையில்,
பலதுறைக் கருத்தில்,
சீர்திருத்த முறையில்,
பணி உருவில்
வெள்ளிக் கிழமைதோறும்
வெளிவரும்
ஒரு பெருந்தன்மையான
உணர்ச்சி வெளியீடு!

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4
வெளிநாட்டுக்கு ரூ. 5

குறிப்பு :—

குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ 3 மட்டும்.

இதழ் விற்பனையாளர்

எல்லா ஊர்களிலும் தேவை;
ஆறில் ஒன்று கழிவு தரப்பெறும்.
இசைந்த முன்பணத்துடன்
தேவைக்கு எழுதுக!

விளம்பரத் திட்டம்

உள் பக்கம் :

ஒரு பத்தியில் ஓர் அங்குலம் ஒரு தடவைக்கு ரூ. $1\frac{1}{2}$. நீண்ட கால ஒப்பந்தங்களுக்கு ரூ. 1.

கு-பு.—நான்கு அங்குலத்துக்குக் குறையாத விளம்பரமும், ஓர் ஆண்டுக்குக் குறையாத ஒப்பந்தமும் முதன்மையாகக் கவனிக்கப்பெறும்.

மேல் பக்கம் :

முழுப் பக்கம்	ஒரு தடவைக்கு	ரூ.	30
அரைப் பக்கம்	,,	,, ரூ.	18
ஒரு பத்தி	,,	,, ரூ.	12

கு-பு.—தொடர்ந்த விளம்பரங்களுக்கு, கட்டண எளிமை கருதப்பெறும்.

குருகுலம், மாம்பாக்கம்;

(வடதிருச்சிற்றம்பலப் பெருவெளி)

மதுராந்தகம் (அஞ்.)

இது,

திருக்குறள் மறைக்குச்

செய்கை நிலையம்.

நாட்டு மக்கள். 'மொழி' 'கலை' 'தொழில்' 'அருள்' 'பணி' என்னும் ஐவகை வாழ்வியல் திறமைகளிற் சிறந்து திகழ்வதற்கு முயல்வது.

பள்ளி, கல்லூரி, கலையரங்கு, அச்சகம், நூற்பதிப்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம், தொழிலகம், அருள் நிலையம், உணவு விடுதி முதலிய பல்வகை உறுப்புகளுடன் பணி புரிவது.

வாழி, மன்பதை!

குருகுலத்தில் **உணவு விடுதி**

- பிள்ளைகள், பண்பிலும் திறமையிலும் இளம்பருவத்திலிருந்தே பழக்கம் பெற, குருகுல வாழ்க்கைதான் சிறந்தது!
- சுவைபொருந்திய நல்வாழ்க்கையைச் சிறு பருவத்திலேயே உருவாக்கிக்கொள்ள, எப்போதும் குருகுலச் சூழலே ஏற்றது.
- மதுராந்தகம் உயர்நிலைப்பள்ளி முதலிய அண்மையிடங்களிற் சென்று கல்வி பயில்வோர், குருகுல விடுதியில் இருக்க விரும்பினால், அவர்க்கும் இடம் அளிக்கப்பெறும்.
- உணவுத் தட்டும் விலையுயர்வும் உள்ள இக் காலத்தில் ஆண்டுக்கு ரூ. 200-க்கு மேற்படாத குறைந்த செலவிலும், விடுதியிற் கலந்து கொள்ள வாய்ப்புண்டு.
- தூய்மையிலும், பணியிலும், ஒருமையிலும் ஆர்வமுடையோர்க்குக் குருகுல இல்லத்தின் வாயில் என்றுந் திறந்திருக்கின்றது!

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம, மதுராந்தகம் (அஞ்..)